# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2007 | ஐப்பசி 11 | துல்கஃதா 3 | (27-10-76) புதன் புத்தகம்30 | இதழ் 54


## சமத்துவ மனப்பான்மை சிங்களவர்க்கு இல்லாததே தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாததற்கு காரணம்

நிஹால் ஜெயவிக்கிரமாவின் கூற்று

தமிழர்களை சட்டரீதியாகவும், யதார்த்தரீதியாகவும் தம்முடன் சரிசமமாக நடத்துவதற்கு சிங்களவர்கள் தயாராக இல்லாதது தான் தமிழர் பிரச்சினைக்கு காரணம் என்பதையும், சிங்களவர்கள் தமிழர்களை சமத்துவ அடிப்படையில் நடத்தினுல் மட்டுமே தமிழர் பிரச்சினை தீரும் என்பதையும் கொழும்பில் ரோட்டரி சங்கத்தினர் ஐ. நா. சபையின் 31வது ஆண்டு நிறைவையொட்டி நடத்திய விசேட கூட்டமொன்றில் பேசிய நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. நிஹால் ஜெயவிக்கிரமா மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிருர்.

சிறுபான்மையோர் பிரச்சினைபற்றி திரு. நிஹால் ஜெயவிக்கிரமா அங்கு கூறியிருப்பது வருமாறு:—

"The rights of minorities will reach fulfilment only on the day when I a citizen born

—4-ம் பக்கம் பார்க்க

## சிங்களப் படங்களை பகிஷ்கரிக்கக்கோரி இயக்கம்!

"தமிழ்திரைப்பட இறக்குமதியை தடைசெய்வதன் மூலம் இலங்கை — இந்திய கலாசார தொடர்பை அறுத்தெறியும் முயற்சியில் சிங்களக்கலைஞர்கள் ஈடுபடுவார்களாயின், அனைத்திலங்கை ரீதியில் சிங்களத் திரைப்படங்களை பகிஷ்கரிக்கும்படி தமிழ்பேசும் மக்களைக்கோரி தமிழ்க்கலைஞர்களாகிய நாம் இயக்கம் நடத்துவோம்!"

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ் நாடகக்கலைஞர் பேரவையின் சார்பில் அதன் தலைவர் பல்கலைமணி சி. த. தம்பிராசா விடுத்துள்ள அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அதிகாரப் போட்டியின் உச்சக்கட்டம்

# மாவோ மனைவி உட்பட நால்வர் படுகொலை!

## சீன முழுவதும் கொந்தளிப்பு!

**மாசேதுங் மறைவுக்குப் பின்னர் கம்யூனிஸ்ட் சீனவில் அதிகாரப்போட்டி உச்சக்கட்டத்தையடைந்து ஆளுக்காள் கழுத்தறுப்புக்கள் நடைபெற்றுவருவது தெரிந்ததே. இந்தக் கழுத்தறுப்புக்களின் விளைவாக காலஞ்சென்ற தலைவர் மாசேதுங்கின் மனைவி சியாங்சிங் உட்பட 4 தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டுவிட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல் வெளியாகியுள்ளது. இந்த 4பேர் மீதும் புரட்சி நடத்தி ஆட்சியைக் கவிழ்க்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு, இந்தத் 'தண்டனை' நிறைவேற்றப்பட்டுள்ளதாம்!**

மாசேதுங் மரணத்திற்குப் பின்னர், அவரது விருப்பப்படி குவா — குவா — பெங் மாசேதுங்கின் இடத்திற்கு நியமிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது தெரிந்ததே. இதைத்தொடர்ந்து ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்டபடி சீனவில் பெரும் குழப்பங்கள் ஏற்படலாயின.

மாசேதுங்கின் மனைவி சியாங்—சிங், மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் வாங்—ஹுங், சங்—சுன் சியோ, யோ—வென்—யுவன் ஆகியோர் குவா — குவா பெங்கின் ஆட்சிக்கு எதிராக புரட்சி நடத்தி, அவரது ஆட்சியை கவிழ்க்கமுயன்றதாக் குற்றம் சுமத்திக் கைது செய்யப்பட்டார்கள்.

மாசேதுங்கின் மனைவி மீது திடீரெனப் பல குற்றச்சாட்

—4-ம் பக்கம் பார்க்க

## உடுப்பிட்டி சிவா பேசுகிருர்!

இலங்கையிலுள்ள ஐ. நா, சங்கம், "சிறுபான்மையோர் பிரச்சினை குறித்து, அக்டோபர் 27, 29, நவம்பர் 1,4,5 ஆகிய நாட்களில் சிறிலங்கா பவுண்டேஷன் இன்ஸ்டிட்டியூட்டில் கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இக்கருத்தரங்குகளில் பல்வேறு அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தவர்களும், அரசியல் இயக்கங்களைச் சேராதவர்களும் பேசுகின்றனர். கருத்தரங்கு ஆரம்பமாகும் முதல் நாளான 27-10-76ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவரான உடுப்பிட்டி சிவா பேசுகிருர்.

## கொழும்பில் முத்தமிழ் விழா

மருதானை தொழில்நுட்பக் கல்லூரி தமிழ் மன்றத்தினர் எடுக்கும் முத்தமிழ் விழா எதிர்வரும் 30-10-76 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இதில் பிரதம விருந்தினராக தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயல் அதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்களும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் கலந்துகொள்ளுகின்றனர்.

இவ்விழாவுக்கு மன்றத் தலைவர் திரு. நியூட்டன் ஞானச்சந்திரன் தலைமை வகிக்கிருர். இவ்விழாவில் கருத்தரங்கு, கவியரங்கு, இசைக்கச்சேரி. பரதநாட்டியம், நாடகம் ஆகிய முத்

—4-ம் பக்கம் பார்க்க

## இன்றைய கருத்தரங்கு

கொழும்பில் வழமையாக நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கொழும்புக் கிளையின் வாராந்தக் கருத்தரங்கு இன்று (27-10-76) புதன் கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி லோறிஸ் வீதியிலுள்ள 51ம் இலக்க இல்லத்தில் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும். தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் பேசுவார்கள்.

# பட்டதாரிகளிடம் நல்லூர் எம். பி. எழுதி வாங்கிக்கொண்ட 'கட்டாய நன்றிக் கடிதம்!

## அரசியல் அதிகாரியின் அட்டகாசம்!

**பட்டதாரி ஆசிரிய நியமனம் கோரி விண்ணப்பித்தவர்களிடம் "இதுகாறும்வேலையில்லாமல் இருந்த எனக்கு இந்த நியமனத்தை வழங்கியதற்காக உங்களுக்கும் அரசாங்கத்துக்கும் நன்றியும் ஆதரவும் உடையவராக இருக்கிறேன்'' என்று கட்டாயமாக எழுதி வாங்கிக்கொண்டாராம் யாழ் மாவட்ட அரசியல் அதிகாரியும், நல்லூர் பா. உ. வுமான அருளம்பலம். அத்துடன், ஒரு பட்டதாரியின் தந்தை தம்மை வந்து சந்திக்கவில்லையென்று காரணம் காட்டி அவருக்கு நியமனம் கிடைக்காதென்றும் நேரடியாகக் கூறிவிட்டாராம்!**

இது சம்பந்தமாகச் சொல்லப்படுவதாவது:—

நல்லூர் தொகுதியிலிருந்து ஆசிரிய நியமனத்திற்கு மனுச்செய்திருந்த வேலையற்றிருக்கும் பட்டதாரிகளை நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் இரண்டாம் முறையாக தனது வீட்டிற்கு வந்து தன்னைச் சந்திக்கும்படி அழைப்பு [illegible]த்திருந்தார்.

முதலாவது அழைப்பு இதற்கு ஒரு கிழமைக்கு முன்னதாக அனுப்பி தனது காரியதரிசியை சந்திக்கும்படி அறிவித்திருந்ததும், பட்டதாரிகள் ஆவலுடன் எம்.பியின் வீட்டிற்கு சென்றதும், காரியதரிசியும் அவருடன் இருந்தவர்களும் கூறியதும் வாசகர்கள் அறிந்ததே. அதாவது ஆசிரிய நியமனம் வேண்டுமாஞல் பட்டதாரிகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதேயாகும். இந்த முதலாவது அழைப்பு எம். பியின் மகன் எம்.பிக்காக கையொப்பம் இட்டு அனுப்பிவைத்திருந்தார்.

பட்டதாரிகளுக்கு இப்படி முன் அறிவித்தல் கொடுத்த மறுகிழமையே எம். பி. கொழும்பிலிருந்து தனது கொக்குவிலிலுள்ள வீட்டிற்கு வந்துதான் தானே கையொப்பம் இட்டு மேற்கூறப்பட்ட இரண்டாவது அழைப்பை அனுப்பிவைத்தார். இந்த ஆங்கில அழைப்புக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது, நீர் இன்னமும் வேலையற்று இந்தப் பட்டதாரி நியமனத்தை ஏற்க விரும்பினுல் கட்டாயமாக என்னை என்னுடைய "பொற்பதி'' ரோட்டிலுள்ள வீட்டில் வந்து சந்திக்கவும். இக்கடிதம் அவசர தபால் மூலம் (Express) அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதில் சந்திக்கவேண்டிய திகதியும், நேரமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

காகிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபடி 6-9-76 அன்று காலை முதல் குறிப்பிட்டிருந்த அந்தந்த நேர ஒழுங்கின்படி பட்டதாரிகள் எம். பியின் வீட்டிற்குச் சென்று சந்திக்கலாயினர். அங்கு சென்ற பட்டதாரிகள் சிலருடன் அன்பாகவும், சிலருடன் சாதாரணமாகவும், மற்றும் சிலருடன் கடினமாகவும் நடந்துகொண்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோகை மயிலும் சுடலைக் குருவியும்

"பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டிவைத்தாலும். — என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் — வாழ்வு
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும் — ஒரு
செங்களம் ஆடிவரும் புகழோடு
சிரிக்க மறப்பேனு?

என்ற உணர்ச்சிக் கவிஞனைப் பார்த்து—

ஆயிரம் அரசாங்கக் கட்சிக் கிளைகளை வைப்பதிலும்
ஒரு முருங்கைக் கிளை வைத்தால்
நாலு காய் காய்க்கும் ஒரு கறிவைக்கலாம்.

என்றே புத்தி சொன்ன தேசியக் கவிஞனைப் பார்த்து—

"உலகத் தமிழர் பிரச்சினையை ஐக்கிய நாடுகளில் சபையில்
எடுத்துக் கூறுவதற்கு முதல் சுதந்திரத் தமிழ்நாடு
இலங்கையிலே தான் உருவாகும்"

எனச் சென்னையில் அன்றே கூறிய சிவானந்தனைப் பார்த்து!

சிறைச்சாலையில், தமிழ் இளைஞர்கட்கு பாணும் சம்பலும்
கொடுக்கும் சிங்கள அமைச்சர்கட்கு மட்டக்களப்பில்
சோறும் புரியாணியும் கொடுத்து வரவேற்கும் தமிழ்த்—
துரோகிகளை இனங்கண்ட இளம் தலைவனைப் பார்த்து!!

சிங்கமெனச் சீறிவரும் இளைஞர்களின் இதயங்களில் வீற்றிருக்கும் எங்கள் சிங்கத் தமிழனைப் பார்த்து!

"சலுகைகள் வேண்டாம் உரிமைகள் வேண்டும் சூ(zoo)தந்திரம் வேண்டாம் சுதந்திரம்வேண்டும்" என முழங்கிய இளைஞர்களின் தலைவனைப் பார்த்து!

இன்பத் தமிழுக்கு இன்னல் வரின் — சங்காரம்
நிசம் என்று சங்கே முழங்கு!

என இளைஞர்களின் உள்ளத்தில் உணர்ச்சி வளர்த்த காசியைப் பார்த்து!!

"ஸ்ரீலங்காக் குடியரசின் அரசியல் சாசனம் ஈழத் தமிழர்களின் அடிமைச் சாசனம்" எனக்கூறி அதற்கு விசுவாசமாக சத்தியப் பிரமாணம் எடுக்கமறுத்து தனது உத்தியோகத்தையே துச்சமென மதித்து உதறி எறிந்த எங்கள் கவிஞர் காசி ஆனந்தனைப் பார்த்து!!

தேர்தலும் பதவியும் முக்கியமல்ல விடுதலை தான் முக்கியமென முழங்கி பாராளுமன்றம் போகாமலும், பதவி வகிக்காமலும், தொண்டனுகவே இருந்து உலகத்தமிழர்களின் இதயங்களில் குடியிருக்கும் தலைவனைப்பார்த்து!

சுதந்திர தமிழ் ஈழத்தில் நின்று தோகை விரித்தாட; ஈழம் காணப் புறப்பட்ட எங்கள் தோகை மயிலினைப் பார்த்து—

கேவலம் சுடலையில் நின்று கத்துகின்ற ஒரு சுடலைக்குருவி இங்கு வா என அழைப்பதுபோல்—

சலுகைகளைப் பெற நினைத்து அடிமைச் சாசனத்தில் கையெழுத்திட்ட, — அற்ப சலுகைகளுக்காக வாலை ஆட்டிய, — சிங்கள அரசின் பிரதிநிதி கட்கு வரவேற்புகள் அளித்த, உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களை காட்டிக்கொடுத்த, —

ஐந்தாம் படை ஊழியன்!

தமிழ் மக்களை ஏமாற்ற நினைத்து ஏமாந்த தமிழன்!!

இன்று அரசாங்கத்தின் சார்பில் தனக்கு தேர்தல் டிக்கட் இல்லை என்றவுடன்—

கடைசியாக, தமிழ் இனத்தைக் கூறுபோட நினைத்து, தன்னைத்தானே கேள்வி கேட்டு விடை எழுதியதை சிறையினிலிருந்தும் படித்திருப்பான். எங்கள் தலைவன்; காறி உமிழ்ந்திருப்பான்!! அதற்கு மோர் கவிதை புனைந்திருப்பான்!' வெளிவந்ததும் அதையே துரோகி முகத்தில் வீசிடுவான்!!!

அந்நாள், நன்னுள் பொன்னுள் என்று வரும் என்றே விடுதலைபெற நினைத்த தமிழர்கள், தேசியக் கவிஞனை, எங்கள் உணர்ச்சிக் கவிஞனை, புரட்சிக் கவிஞனை, வரவேற்கக் காத்திருக்கிறுர்கள்.

—பாலா அசோ

# "பாராளுமன்றகதிரைக்காகவல்ல தமிழ் ஈழத்துக்காகவே இயக்கம் நடத்தவேண்டும்!"

## பட்டிருப்பில் நவம் முழக்கம்!



"பாராளுமன்ற அரசியலை நாம் நீண்ட நாட்களுக்கு நடாத்திக்கொண்டிருக்க முடியாது. தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரேகுரலெழுப்பிப்போராட வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் வந்து நிற்கின்ருேம். வெறும் பாராளுமன்றக் கதிரைகளுக்காக நாம் இயக்கம் நடாத்திக்கொண்டிருக்கமுடியாது. தமிழ்ஈழத்தை அடைவதற்காகவே நாம் இயக்கம் நடாத்த வேண்டும்!"

பட்டிருப்புத் தொகுதியைச்சேர்ந்த கல்லாற்றில் 16-10-76சனிக்கிழமையன்று இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஜோர்ஜ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில், சாவகச்சேரிப் பிரதிநிதி அவர்கள் மேலும் பேசுகையில் "வெளிநாட்டில் இருக்கின்றவர்களுக்கு ஈழத்தமிழர்களின் பிரச்சினை என்னவென்பதுபுரியும். அதைப் பற்றி அவர்கள் தெரிந்துவைத்துக்கொண்டிருக்கிருர்கள். ஆனுல் இங்குள்ள நமக்கு அது புரியவில்லை. எமக்குள்ள உண்மையான பிரச்சினைகளைப் பற்றி நாம் விளங்கிக்கொள்வோமானுல் 20 அம்சத்தைப் பற்றியோ. வேறெதைப் பற்றியோ நாம் சிந்திக்கத் தேவையில்லை.

இரண்டாம் உலகமகாயுத்தத்தில் போலந்தில் 30 இலட்சம் யூதர்கள் வசித்தார்கள். அப்போது ஹிட்லர் ஆரம்பித்த இன ஒழிப்புத் திட்டத்தின்போது போலந்திலுள்ள தலைவர்கள் மக்களை எச்சரிக்கை செய்தார்கள். ஏற்படப்போகின்ற ஆபத்தைப் பற்றி விளங்கப்படுத்திஞர்கள். அவர்களுடைய எச்சரிக்கையை அப்போது யாருமே பொருட்படுத்தவில்லை. அங்கு வசித்தவர்களில் 90 வீதமானேர் அவர்களைக் கேலி செய்தார்கள். எச்சரிக்கையைப் பற்றி ஆராயாமல் அலட்சியமாக இருந்தார்கள். அதன் பலன் யூத இனமே இல்லாதொழிகின்ற ஒரு ஆபத்தான நிலை ஏற்பட்டது. இறுதியில் 30 ஆயிரம் யூதர்களே மிஞ்சியிருந்தார்கள். அழிகின்ற ஒரு நிலையிற்தான் யூதர்கள் தமக்கிடையே ஒற்றுமையைப் பற்றிச் சிந்தித்தார்கள். அந்நிலைக்கு தமிழ்மக்கள் வரக்கூடாது. எங்களுக்கு ஏற்படப்போகின்ற ஆபத்தைப் பற்றி நாம சிந்தித்து செயலாற்றவேண்டும். தனிப்பட்டமுறையில் தங்கள் வாழ்க்கையில் தாக்கப்படும் போதுதான் தமிழன் சிந்திக்கத் தலைப்படுகின்ருன். இந்நிலை மாறவேண்டும். எமக்காக இல்லாவிடினும் எம் குழந்தைகளுக்காகவேனும் நாம் ஒன்றுபட்டுப்போராட முன்வரவேண்டும் ஆளும் வர்க்கத்தினரில் கால்களை நக்கிஞலும் தமிழன் கீழ்த்தரமானவனுகத்தான் கணிக்கப்படுகின்ருன். இனத்தை விற்றுப் பிழைத்தவன் எவனுவது வாழ்ந்ததாகவரலாறு இல்லை. சிங்கள அரசாங்கம் தமிழ்ப்பகுதியைப் பலவிதங்களிலும் புறக்கணித்துவருகின்றது. அகப்பை பிடிக்கின்ற உரிமை தமிழர்களுக்குக் கிடைக்கும்போதுதான் தமிழர்கள் சுபீட்சமாக வாழமுடியும். இந்த நாட்டிலே நாம் வாழவேண்டுமென்ருல் நாமும் இந்த நாட்டிலே அதிகாரத்தோடு இருக்கவேண்டும். சேர்ந்து ஆளவேண்டும். அது முடியாவிடின் பிரிந்துஆளவேண்டும் என்ற நிலைக்குத்தான் நாம் வந்து நிற்கின்ருேம். எக்கட்டத்திலும் நாம் பிரிவினை கோரவில்லை. நாம் நாட்டைப் பிளவுபடுத்தவில்லை. இழந்துவிட்ட எமது நாட்டை நாம் மீண்டும் பெற்றுக் கொள்ளத்தான் விரும்புகின்ருேம் எனக் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் திருவாளர்கள்: பூ. கணேசலிங்கம், கணேசபிள்ளை, முத்துப்பிள்ளை, வ. ஆ. தங்கவேலாயுதம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# தமிழ்த் தொழிலாளர்களுக்கு தனித் தொழிற்சங்கம் தேவை

## மன்னுரில் செல்லத்தம்பு பேச்சு!

'வடக்கு,கிழக்கு மாகாணங்களிலும் மற்றும் பகுதிகளும் பணியாற்றும் பல்லாயிரத்திற்குமேற்பட்ட தமிழ் தொழிலாளர்களுக்கு எவ்வித தொழிற்சங்க அமைப்புக்களும், இல்லை. பல்வேறு துறைகளிலும் தொழில் புரியும் அத்தொழிலாளர்களின் நலன் கருதி புதிய தொழிற்சங்கங்கள் அமைத்து அவர்கள் எல்லோரையும் தமிழ் தொழிற்சங்க கூட்டணியிற் கீழ் கொண்டு வருவதற்கு முயன்று வருகின்ருேம். இன்று தமிழ் தொழிலாளர்களுக்கு விமோசனம் அளிக்கக் கூடிய தொழிற்சங்க இயக்கம் தொழிற்சங்க கூட்டணி என்பதை உணர்ந்து இத்தொழிற் சங்கத்தில் சேருவதற்கு பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் முன்வந்துள்ளனர்."

இவ்வாறு வவுனியா நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தொழிற்சங்க கூட்டணியின் தலைவருமாகிய திரு. தா. செல்லத்தம்பு அவர்கள் "இலங்கை கல்லுடைத்தொழிலாளர் சங்கம்" என்ற பெயரில் புதிய மொழிவழித்தொழிற் சங்கம் ஒன்றை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி புதிய மொழி வழித்தொழிற்சங்க அமைப்புக் கூட்டம் மன்னுர் தொகுதியிலுள்ள பரப்புக் கடந்தான் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் பேசுகையில் தமிழ் தொழிலாளர்களை இடதுசாரிதொழிற் சங்கங்கள் ஏமாற்றிவந்தன; இனி மேலும் அவர்கள் ஏமாற்றப்படாதிருப்பதற்கு சகல தமிழ் தொழிலாளர்களும் தமிழ்தொழிற்சங்க கூட்டணியின் கீழ் அணிதிரள வேண்டுமென கேட்டுக்கொண்டார்."

தமிழ் தொழிற்சங்க கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. ஐ. தி. சம்பந்தன் பேசினுர். "தமிழ் தொழிலாளர் எல்லோரும் ஒன்று சேருவதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அமையப்போகும் தமிழ் ஈழத்தின் முன்னேடியாக தமிழ் தொழிலாளர்கள் ஒரு இணைப்பின் கீழ் ஒற்றுமைப்பட வேண்டுமென்ருர்.

—3-ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர் விடுதலைப் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும்!"

## நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு!

"இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றபோது, அதை அடிப்படையாகக் கொண்டே இலக்கியங்கள் படைக்கப்பட்டன. வியட்னும் போராட்டத்தின் போது எழுந்த வியட்னமிய இலக்கியங்கள் அந்த நாட்டு விடுதலைப் போராட்டத்தை மையமாகக் கொண்டே எழுந்தன. அதேபோல, பல்வேறு ஏகாதிபத்தியத் தொல்லைகளாலும் நசுக்குண்டு, இன்று தமது தாய் நாடான தமிழ் ஈழத்தின் மீட்சிக்காக தமிழ் மக்கள் தேசிய விடுதலைப் போராட்டத்திலிறங்கியிருக்கும் இன்றைய காலகட்டத்தில், இந்த விடுதலைப் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்ட இலக்கியங்கள் படைக்கப்படவேண்டும். இதுவே தன்மானமுள்ள தமிழ் எழுத்தாளனின் கடமையும், காலத்தின் தேவையுமாகும்!"

இவ்வாறு குண்டசாலை விவசாயப் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் காவலூர் எஸ். ஜெகநாதனின் "சொந்தங்கள் தொடர்கின்றன" என்ற நூல் அறிமுக விழாவில் பேசிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார். திரு. த. ம. தேவேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கோவை மகேசன் மேலும் கூறியதாவது:—

"யதார்த்தம், முற்போக்கு என்று கூறிக்கொள்ளும் எழுத்தாளர்களுக்கு இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் நடத்திவரும் விடுதலைப் போராட்டம் பிற்போக்காக தெரிவது மிக வேடிக்கையானது. அவர்கள் கண்ணிருந்தும் பார்க்க மறுக்கிறார்கள். அறிவிருந்தும் சிந்திக்க மறுக்கிறார்கள். வியட்னமுக்காகவும், தென்னபிரிக்காவுக்காகவும், ரேடீசியாவுக்காகவும் பக்கம் பக்கமாக எழுதும் இவர்கள் கண்களுக்கு சொந்த நாட்டில் நடைபெறும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தெரிவதாயில்லை. தமிழினத்தின் மரபையும், பண்பாட்டையும், சிதைப்பதுதான் இவர்களது ஒரே நோக்கமாகவிருக்கிறது.

"தென்னபிரிக்காவில் இன ஒதுக்கலை எதிர்த்து விடுதலைக்காக அங்குள்ள கறுப்பு இன மக்கள் வீரப் போராட்டம் நடத்திவருகிறார்கள். அங்குள்ள கறுப்பு இன எழுத்தாளன் ஒருவன் அண்மையில் கூறியிருந்த ஒரு கருத்தை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஆபிரிக்க எழுத்தாளன் வெறும் எழுத்தாளன் மட்டுமல்ல; அவன் ஒரு விடுதலை வீரனுகவும் இருக்கிருன் என்று அவர் கூறியிருந்தார். அதேபோல, ஈழத்தமிழ் எழுத்தாளன் ஒவ்வொருவனும் வெறும் எழுத்தாளனுகமட்டுமேயிராது— விடுதலை வீரனுகவும் மாறவேண்டும். பேனு பிடிக்கும் கைகள் தேவையேற்படும் போது— விடுதலைக்காக எதையும் ஏற்கத் தயாராக இருக்கவேண்டும். ஆனுல் எழுத்தாளன் ஒருபோதும் மாற்றானுக்கு கால் பிடித்து வாழும் இழி நிலைக்கு தாழ்ந்துவிடக் கூடாது!"

"திரு. ஈழவேந்தன் பேசுகையில்— திறனுய்வு என்பது ஒரு எழுத்தாளனின் திறமையை மட்டும் எடுத்துக்கூறுவது மட்டுமல்ல— குறையையும் எடுத்துக் கூறுவது தான். ஆனுல் அதைக்கூறுவதற்கும் ஒரு வரைமுறை இருக்கிறது. திட்டுவதற்கு பெயர் திறனுய்வு அல்ல" என்ருர்.

திரு.ஆ. ரகுபதி பாலசிறீதரன் பேசுகையில்— 22 வயதுடைய நண்பர் ஜெகநாதன், இத்துணை சிறந்த கதைகளைப் படைக்க முடியுமானுல், இன்னும் அவர் கொஞ்சம் அனுபவம் பெற்ருல், இன்னும் பெரிய சாதனைகளை இலக்கிய உலகில் நிலை நாட்டுவது நிச்சயம் என்ருர்.

விழாவில் திருமலை நவம், ஆதவன், புலவர் பார்வதிநாதசிவம், குகதாசன், உட்பட பலர் பேசினர். விழாவை விரிவுரையாளர் திரு. பேரின்பநாயகம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். விழா முடிவில் நூலாசிரியர் காவலூர் ஜெகநாதன் அனைவர்க்கும் நன்றி கூறினுர்.

---

# தமீழ விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு தமிழனுக்கும் பங்குண்டு!

## கிளிநொச்சி பா. உ. ஆனந்தசங்கரி உரை!



"இழந்த திருநாட்டை மீட்டு எடுக்கும் புனித இலட்சியத்தை முன் வைத்து போராட திர்மானித்து விட்ட நாம் இயக்கத்தை அமைப்பு ரீதியாக வலுப்படுத்த வேண்டும். எமது போராட்டங்களுக்கு எதிராக அரசின் கெடுபிடிகள் அதிகரித்துவரும் இக்காலத்தில் தலைமை பீடத்துக்கும், மக்களுக்கும் இடையே தொடர்புகளைப் பெருக்க அமைப்பு எமது இயக்கத்தில் மேலும் ஸ்திரப்படுத்தப்படவேண்டியது அவசியம்."

இவ்வாறு கிளிநொச்சி பட்டின தமிழர் விடுதலை கூட்டணி கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய கிளிநொச்சி பா. உ. வீ. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

கூட்டணி மேற்கொள்ளும் போராட்டங்களை அவ்வப்போது பத்திரிகைகளே மக்களுக்கு அறியத்தருகின்றன. போராட்டம் தீவிர மடையும்போது பத்திரிகைகளின் வாய்ப்பூட்டு மேலும் இறுகலாம். இந்நிலையில் எமது உடன் தீர்மானங்களை மக்களுக்கு அறியத்தரவும் தேவையான விளக்கங்களைத்தரவும் கிளைகளை நன்கு பயன்படுத்த முடியும். இதனுல்தான் தமிழர் விடுதலை கூட்டணி கிராமங்கள் தோறும் கிளைகளை நிறுவி வருகிறது. நாம் பார்வையாளர்களாக இருக்கும் தமிழ் மக்களையும் பங்காளர்களாக மாற்றி போராட்டத்தில் ஈடுபடச் செய்யத்தான் கருத்தரங்குகளை நடத்தி கொள்கை விளக்கம் தருகிருேமே தவிர இங்குள்ள சிறீலங்கா கங்காணிகள் கூறுவதுபோல தேர்தலை எதிர் நோக்குவதற்காக அல்ல.

"போராட்டப் பொறுப்புகள் தலைவர்களுக்குமட்டும் உரியதல்ல. தமிழ்ப்பேசும் ஒவ்வொருவரும் தமிழ்ஈழப் போராட்டப் பொறுப்புகளை தானும் ஏற்றுக்கொள்ள [illegible] வதிலும், பேசுவதிலும் காலத்தை கழிக்காமல் ஒவ்வொருவரும் நன்கு இயங்குவதால் சுமைகள் குறையும் பலம் பெருகும் என்பதை ஒவ்வொரு இளைனுனும் உணரவேண்டும். வீதியிலே நின்று இயக்கத்தை விமரிசிப்பதை விடுத்து கிராமக் கிளைகளில் தம்மை ஒவ்வொருவரும் அங்கத்தவராக பதிவு செய்துகொள்ளவேண்டும். அங்கத்தவர்களின் ஆலோசனைகள் கிளைகள் மூலம் தொகுதிக் கிளைக்கும் அதன்மூலம் மத்திய செயற்குழுவுக்கும் செல்லக்கூடிய ஒரு நிலை கிளை அமைப்புகள் பயப்படுத்தப்படும் போது ஏற்படும்.

"கிளிநொச்சி தொகுதியில் கடந்த மூன்று மாதங்களுள் பதினெட்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான அங்கத்தவர்களும் ஆயிரக்கணக்கான தொண்டர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்ருர்கள். இதன்மூலம் தீவிரமாக இயக்கத்துக்கு உழைக்கக் கூடிய பலர் வெளிப்படுத்தப் பட்டுள்ளனர். இக்கிளைகள் மூலம் கிராமங்களதோறும் தமிழர் விடுதலைக்கூட்டணி மீது மக்களுக்கு பற்றும் உற்சாகமும் வளர்ந்து வருவதைக் காணும் போது மகிழ்ச்சி அடைகிறேன். தலைமைப்பீடம் செயற்படுத்தும் ஒவ்வொரு திட்டங்களிலும்.

"கிளிநொச்சி மக்கள் தீவிர பங்கேற்று வருகின்றனர். மிகவும் பரந்த விஸ்தீரமான எமது விவசாயத் தொகுதி கிளை அமைப்புகளின்மூலம் மேலும் தீவிரமாக இயங்கக் கூடியதாக இருக்கும். இன்று ஆரம்பிக்கப்படும் பட்டினக் கிளையும் நல்ல முறையில் இயங்கும் என நான் நம்புகிறேன்."

தொடர்ந்து நடைபெற்ற செயற்குழுத் தெரிவில் தலைவராக திரு. வீ. ஆனந்தசங்கரி பா. உ.வும் செயலாளராக திரு. ப. வை. ஜெயபாலனும் பொருளாளராக நா. பேரம்பலம் அவர்களும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர். உபதலைவராக திரு. க. சு. முருகேசு, கே. சி. நாராயணனும் துணைச் செயலாளர்களாக வே. முத்துக்குமாரு, நா. நாகேந்திரன் ஆகியோரும். செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் ஆ. குலசேகரம்பிள்ளை, வே. இராஜலிங்கம், பொ. ஞானபண்டிதர், இ. சிவலிங்கம், க. அம்பிகைபாகன், அன்ரன், தங்கராசா, அமிர்தநாதர் ஆகியோரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

---

# கேள்விப்படுகிருேம் உண்மையா?

● திருகோணமலையில் பிரபல சட்டத்தரணியொருவருக்கு அண்மையில் அளிக்கப்பட்ட சமாதான நீதவான் பட்டம் ஒருமாத காலத்துக்கிடையில் தம்பலகாமத்தைச் சேர்ந்த மற்ருெருவருக்கு மாற்றப்பட்டதன் மர்மம் என்ன? குறித்த சட்டத்தரணியை அரசாங்கக் கட்சியில் சேருமாறு அரை அமைச்சர் ஒருவர் நிர்ப்பந்தித்தாகவும் அந்த நிர்ப்பந்தத்துக்கு தன்மானமுள்ள அந்தச் சட்டத்தரணி அடி பணிய மறுத்ததாகவும், இதன் எதிரொலியாகவே சமாதான நீதவான் பட்டம் மற்ருெருவருக்கு மாற்றப் பட்டதாகவும் சொல்லப்படுவது உண்மையா?

● மட்டக்களப்பையடுத்துள்ள நொச்சிமுனையில் ராஜாதிராஜனின் ஏவல் பிசாசான ஒரு காக்கிச் சட்டைக்காரர் இரு இளம் பெண்களிடம் வகையாகப் மாட்டிக்கொண்டு "தூசி துடைக்கப்பட்டதாக" பேசப்படுவது உண்மையா? இந்தக் காக்கிச் சட்டைக்காரர் முன்பும் பெண்களிடம் வாங்கிக்கட்டியிருப்பதாக கூறப்படுவதும் சரியா?

● பல லட்ச ரூபா மோசடியில் அகப்பட்டு, பிணையில் அண்மையில் வெளியே வந்த புதிய பத்திரிகை முதலாளியொருவர் மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையின் கணக்கு வழக்குப்பற்றிக் கவலைப்படுவதேன்? தன்னுடைய "அசிங்கத்தை" மூடி மறைத்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவது தான் இதன் பின்னணி நோக்கமா?

● அண்மையில் சண்டிலிப்பாயில் நடைபெற்ற கருத்தரங்கொன்றின் போது, குறுக்கிட்டு குழப்பம் செய்தும் மின்சாரத்தை துண்டித்தும் வெறியாட்டம் ஆடிய நீலக்கட்சி அடிவருடிகளுக்கு அங்கு நின்ற தமிழ் இளைஞர்கள் உடனடியாகத் தகுந்தபாடம் 'புகட்டியதாகவும், இறுதியில் ரௌடித்தனம் புரிந்தவர்கள் இறுதியில் உடுவில் பா. உ.வின் காலில் விழுந்து பரிதாபமாக மன்னிப்பு கேட்டதாகவும் சொல்லப்படுவது உண்மையா?

● அண்மைக்காலமாக வெளிவரும் ஒருமாத சஞ்சிகையின் பட்டதாரி ஆசிரியை தமிழ் சினிமாப்படமொன்றில் கதாநாயகியாகவும் நடிக்கவிருக்கிருராம்.

● திருகோணமலை துறைமுக சரக்குக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படும் உணவிலும் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், சிங்கள ஊழியருக்கு நல்ல உணவும், தமிழ் ஊழியருக்கு தரம் குறைந்த உணவும் கொடுக்கப்படுவதாக தமிழ் ஊழியர் மத்தியில் [illegible] இருந்து வருவது உண்மையா?

---

## தமிழ்த்தொழி ...

—2-ம் பக்கத் தொடர்

கூட்டத்திற்கு திரு. சே. துரைநாயகம் தலைமை வகித்தார்.

திரு. வேலு தேவர், திரு. சிவனடியார் ஆகியோர் உரையாற்றினர்.

இலங்கை கல்லுடைத் தொழிலாளர் சங்க நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ், ரெங்கசாமி. உபதலைவர்கள்: திரு. கே. முத்தையா, திரு. சி. ராமையா. இணைச்செயலாளர்கள்: திரு. மு. பூமாலை, திரு. சி. சுப்பிரமணியம். இணைப்பொருளாளர்கள்: திரு. சு. கருப்பையா, திரு. தங்கவேல் 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

# "பழந் தமிழர் வீரம் இன்று மீண்டும் புத்துயிர் பெறுகிறது!"

## பட்டிமன்றத்தில் உரை!

"புறநானூறு, மற்றும் சங்க நூல்களில் காணப் படும் தமிழர் வீரம் இன் னும் மங்கி மறைந்துவிட வில்லை. தமிழ்ஈழ விடுதலைப் போராட்டம் நடைபெறும் இன்றைய காலக்கட்டத்தில் அந்தத் தமிழ் வீரம் மீண் டும் உயிர்பெற்று வருவதைப் பார்க்கிறோம். பொட்டிட்டு, மாலையிட்டு, போய்வா களத் துக்கு என்று அன்றைய தமிழ் அன்னையர்கள் தம் மைந்தர்களையும் கணவர் களையும் களத்துக்கு அனுப்பி வைத்ததுபோல, இன்றைக் கும் தமிழ்த் தாய்மார்கள் தமது பிள்ளைகளை விடுதலைப் போர்க்களத்துக்கு அனுப்பி வருவதுமட்டுமன்றி களப் பலி கொடுத்துள்ளதையும் நாம் யதார்த்த ரீதியாகக் கண்டுவருகிறோம். தமிழ்க் கவிஞன் காசிஆனந்தன் களத்தில் குதித்து இன்று வெங்கொடுமைச் சிறையில் வாடுகிறான். தமிழன் கலை கள் அவனது வாழ்க்கையோ டிணைந்தவை — அந்தக் கலை கள் ஒருபோதும் அவனிட் மிருந்து மறையாது!"

—இவ்வாறு கொட்டாஞ் சேனை புனித பெனடிக்ற் கல் லூரி மண்டபத்தில் மேற்படி கல்லூரி தமிழ் இலக்கிய மன்றத்தினர் எடுத்த முத் தமிழ் விழாவையொட்டி இடம்பெற்ற பட்டிமன்றத் தில் உரையாற்றிய சுதந்தி ரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார்.

கலை வாழ்க்கைக்கா — பிர சாரத்திற்கா என்ற தலைப் பில் 23-10-76 சனிக்கிழமை காலை நடைபெற்ற இப் பட்டிமன்றத்தில் கலை வாழ்க் கைக்கு என்ற கருத்துக்கு ஆதரவாக திரு. கோவை மகேசன் தலைமையில் திரு வாளர்கள் நாவண்ணன், ம. ம. அந்தோனிமுத்து ஆகி யோரும், கலை பிரசாரத் திற்கு என்ற கருத்துக்கு கவிஞர் முருகையன் கவி ஞர் சில்லையூர் செல்வராசன், ரி. சச்சிதானந்தன் ஆகியோ ரும் வாதிட்டனர். இலங் கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகத்தைச் சேர்ந்த பேராசிரியர் திரு. ஆ. சதாசிவம் இப்பட்டிமன் றத்திற்கு நடுவராக விளங்கி னார்.



அண்மையில் அகால மரணமடைந்த பரந்த னைச் சேர்ந்த தமிழர் விடு தலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளர் திரு. வ. கண பதிப்பிள்ளையின் இறுதிச் சடங்குகளின் போது எடுத்த படம் இது. தமிழ ரசுக்கட்சியின் நெடுங்கால ஆதரவாளரான இவர் தமிழ்க் கட்சிகளின் ஒற்று மைக்காகப் பாடுபட்டு வந்தவர். தமிழ்க்கட்சி களின் ஒற்றுமையைவேண்டி பரந்தன் சந்தியில் 1970ம் ஆண்டு தனிநபர் சத்தியாக் கிரகம் செய்தவர். ட்ரயல்—அற்—பார் வழக்கில் திரு. அமிர்தலிங்கம் விடுதலை செய்யப்பட்டதையறிந்து அளவுக்கதிக குதூகல மடைந்த திரு. கணபதிப் பிள்ளை அதிக மகிழ்ச்சியை தாங்கிக் கொள்ளமுடியாமல் காலமானார். "நாற்பது ஆயி ரம்" என்று செல்லமாக அழைக்கப்படும் திரு கண பதிப்பிள்ளையின் இறுதிச் சடங்கில் அடலேறு மு. ஆலாலசுந்தரம், இ. கிருஷ்ண ராசா அவர்களும் பங்கேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர். தமிழ் இளைஞர் பேரவையின் பரந்தன் கிளையினர் உதய சூரியன் கொடியினால் அவ ரது பூதவுடலை மூடி அஞ்சலி செலுத்தினர். இறுதி ஊர் வலத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்ற னர். வீரத்தமிழர் கணபதிப் பிள்ளைக்கு நமது அஞ்சலி யையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## சமத்துவ மனப்...

—1-ம் பக்கத் தொடர்

in the Southern half of my country, can look in the eye at my fellow countryman from the North, and tell hin honestly and sincerely that, him fact and in law, we are equal citizens of this island home."

"தென்னிலங்கையைச் சேர்ந்த பிரஜையாகிய நான், எனது வட இலங்கை யிலுள்ள எனது சக பிரஜை யைப் பார்த்து, விசுவாச மாகவும், நேர்மையாகவும், "சட்டப்படியும், உண்மைப் படியும் நாங்கள் இத்தீவின் சமத்துவமுள்ள பிரஜைகள்" என்று கூறுகின்ற நாள் என்று வருமோ, அன்றுதான் சிறுபான்மையோரின் உரி மைகள் பூரண திருப்தியடை யும்.'

என்று கூறியிருக்கிறார் திரு. நிஹால் ஜெயவிக் கிரமா.

"இந்த நிலையை எய்துவ தற்கு ஒரேயொரு வழி— தமிழர் விடுதலைக்கூட்டணி காட்டுகின்ற வழி — ஒரு இனம் ஆளப்படும் இனமாக வும், மற்றோர் இனம் ஆளும் இனமாகவும் இருக்கின்ற நிலையைமாற்றி. இரு இனங் களும் தன்னைத்தானே ஆளும் சுயநிர்ணய உரி மையை மீட்டுக்கொள்ள வேண்டும்; தன்னைத்தானே தமிழினம் சுதந்திரமாக தனது நாட்டில் ஆளவேண் டும். அப்போதுதான் இரு இனங்களும் சமத்துவமாக வும், சுதந்திரமாகவும், சரி சமமாகவும் வாழமுடி யும்!

—இவ்வாறு தமிழர் விடு தலைக் கூட்டணியின் பிர முகர் ஒருவர் திரு. நிஹால் ஜெயவிக்கிரமாவின் பேச்சுப் பற்றி குறிப்பிட்டபோது தெரிவித்தார்.

## படுகொலை...

—1-ம் பக்கத் தொடர்

டுக்கள் சுமத்தப்பட்டன. மாசேதுங்கை கொல்வதற்கு சதி செய்ததாகவும், மாசே துங் மனைவி மீது சீன ஆதிக் கம் குற்றம் சுமத்தியது. மாசேதுங் இருக்கும்வரை அவரது மனைவியையும் ஏற் றிப் போற்றியவர்கள், மாசேதுங் இறந்ததும், அவ ரது மனைவிக்கு எதிராக குற் றங்கள் சுமத்த முற்பட் டார்கள்.

மாசேதுங் மனைவியும், மற் றும் மூன்று தலைவர்களும் சீனக் கம்யூனிஸ்ட்கட்சிக்கு எதிராக சதிசெய்ததாக சீனத்தலை நகரான பீகிங் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டமாசே துங்கின்மனைவிசியாங்சிங்குக் கும், மற்றும் மூன்று தலைவர் களுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு, தண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்ட தாகவும், இப்போது தகவல் வெளியாகியுள்ளது. எனி னும் இத்தகவல் இன்னும் சீனாவினால் ஊர்ஜிதம்செய் யப்படவில்லை.

மாசேதுங் மனைவி — சியாங்சிங்கின் ஆதரவாளர் கள் இப்போது சீனா முழுவ தும் இலட்சக்கணக்கில் கைதுசெய்யப்பட்டு வரு கிறார்கள். இதனால் சீனா முழு வதும் பெருங்கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

## கொழும்பில்...

—1-ம் பக்கத் தொடர்

தமிழ் நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இன்றைய தமிழர் அரசியல் நிலையை படம்பிடித்தும் காட்டும் நாடகமான "மெழுகுவர்த்தி எரிகின்றது" எனும் அரசி யல் நாடகமும் மேடையேற் றப்படுகிறது. அனுமான் கண்ட இலங்கை! என்ற தலைப்பில் நவீன கதா காலட்சேபமும் இடம் பெறும். விழாவின் மற் றோர் முக்கிய நிகழ்ச்சியாக தமிழருவியின் ஆறாவது இதழ் வெளிடப்படும்.

## கப்பித்தாவத்தையில் மகளிர் பிரார்த்தனை!

தமிழ் மகளிர் பேரவை யின் கொழும்புக்கிளையினர் நடாத்தும் தமிழர் நலன் வேண்டும் வாராந்தப் பிரார்த்தனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29-10-76) மாலை 5-30க்கும் மணிக்கு மிடையே மருதானை கப்பித் தாவத்தை பிள்ளையார் கோவிலில் நடைபெறுமென் றும் இதில் அன்பர்கள் அனு தாபிகள் அனைவரையும் பங்குபற்றும்படியும் மகளிர் பேரவையினர் அழைக்கின் றனர்.

## பட்டதாரி...

—1-ம் பக்கத் தொடர்

டார். இவர்கள் யாவரும் எம். பி அனுப்பியிருந்த கடி தத்தில் அவர் மாதிரிக்கு எழுதி வைத்திருந்த வாசக மொன்றை பிரதி பண்ணிக் கையொப்பமிட்டு அவரிடம் ஒப்படைக்கப் பணிக்கப்பட் டனர். அந்த வாசகமானது பின் கூறப்படும் சாரப்பட்ட தாயிருந்தது: "இது காறும் வேலையில்லாமல் இருந்த எனக்கு இந்த நியமனத்தை வழங்கியதற்காக உங்களுக்கும் அரசாங்கத்துக்கும் நன்றியும், ஆதரவும் உடையவராக இருக்கி றேன்."

ஒரு சில பட்டதாரிகளிடம் எம். பி. பயங்கொள்ளக் கூடிய விதத்தில் நடந்து கொண்டார். அவர்களின் தகப்பன்மாரைப்பற்றி தனக்கிருந்த ஏதோ ஆத்தி ரம் தீரத் திட்டித் தீர்த்து விட்டு, பின் இப்பட்டதாரி களை நோக்கி உங்கள் தகப் பன்மார் செய்த குற்றத்திற் காக உங்களை நான் தண் டிக்கவிரும்பவில்லை. உங்க ளுக்கு நான் உதவி செய்கி றேன் என்று ஆறுதல் மொழிகளால் கூறி அவர் களைக் கொண்டு தான் அனுப்பியிருந்த கடிதங்க ளில் மேல் கூறப்பட்ட நன்றி வாசகத்தை பிரதி பண்ணி கையொப்பங்கள் போட வைத்து அவற்றைப் பெற் றுக்கொண்டார்.

ஒரே ஒரு பட்டதாரியிடம் மிகவும் கடினமாகவும, பிடி வாதமுமாக நடந்துகொண் டார். இப்பட்டதாரி அந்த நன்றி வாசகத்தைப் பிரதி பண்ண ஆயத்தம் செய்த போது. இந்தப் பட்டதாரி யார் என வினவினார், உடனே எம்பியின் லிகிதர் இன்னாருடைய மகள் என அறிமுகம் செய்து வைத் தார்.

உடனே பட்டதாரியைப் பார்த்து, உன்னுடைய தகப்பனாரை ஏன் என்னைச் சந்திக்க உடன் கூட்டி வர வில்லை என்றாராம் எம். பி.

சுகமில்லாமல் இருப்ப தால் தகப்பனார் வரவில்லை! என்றாராம் அப் பட்டதாரி. "தனது பிள்ளையின் நன்மை யில் அக்கறை இருந்தால் அவர் கட்டாயம் கார் ஒன் றில் வரலாம். கட்டாயம் அவர் வரத்தான் வேண் டும்" என்று எம். பி. வற்பு றுத்தினார்.

அவர் வரமாட்டார் எனப் பட்டதாரி பதிலளித்தார்.

அவர் கட்டாயம் வந்து என்னைச் சந்திக்க வேண்டும் இல்லாவிட்டால் உமக்கு இந்த நியமனம் கிடைக்க மாட்டாது என எம். பி. பிடிவாதமாகக் கூறினார்.

நான் இந்த நன்றி வாச கத்தில் கையொப்பம் இட் டுத்தந்தாலும், தகப்பனார் வராவிட்டால் எனக்கு நிய மனம் கொடுக்க மாட்டீர் களா? என பட்டதாரி கேட் டார். நிச்சயமாக கொடுக்க முடியாது என எம்.பி. பதில் இறுத்ததும் பட்டதாரி அவ் விடத்தை விட்டு கையில் வைத்திருந்த கடிதத்துடன் வெளியேறினார். அப்பொ ழுது கட்டாயப்படுத்தி எம். பி. கையொப்பம் வைக்காத அக்கடிதத்தை பெற்றுக் கொண்டார்.

எம்.பியைச் சந்திக்க வந் திருந்த மற்றப் பட்டதாரி கள் வியப்புடனும், ஆத்தி ரத்துடனும் இந்நிகழ்ச்சி யைக் கவனித்துக்கொண்டு நின்றனர். இவர்களில் சிலர் புறக்கணிக்கப்பட்ட அப் பட்டதாரியை அவர் வீடு தேடிச் சென்று சந்தித்து அவர் எம்.பியுடன் நடந்து கொண்ட கௌரவமான தும், சுயமரியாதையுமான முறையை பாராட்டி தங் கள் ஆத்திரத்தையும் தெரி வித்தனர்.

கல்வி மந்திரியும், உயர் கல்வி அதிகாரிகளும் வேலை யற்றிருக்கும் பட்டதாரிகள் அனைவருக்கும் ஆசிரிய நிய மனம் வழங்கப்படும் என்று பல தடவைகள் வற்புறுத் திக் கூறியிருந்தும் நல்லூர் எம்.பி மட்டும் இவ்வித மான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது ஆச்சரிய மானதும், மர்மமானதும் ஆக இருப்பதாக விளங்குகிற தென்று பட்டதாரி மாண வர்கள் கூறினர்.

**தென்னை வளம்**

மேற்படி புத்தகம் பெறவிரும்புவோர் மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறை களில் எவையேனும் 2ஐ அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விளம்பரப் பகுதி

மில்க்வைற் சவற்கார தொழிலகம் யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி 194 ஆ, இலக்கத்தில் 1976ம் வருடம் ஒக்டோபர்மாதம் 27ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org